### செயற்கையான மின் தட்டுப்பாட்டை உருவாக்கியது

# அதானியிடம் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கத் தானா சி.எம்.சார்?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை.நவ.5. சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலை தளத்தில் கூறியிருப்பதாவது:-

கடந்த தி.மு.கழக ஆட்சியில் அனல், புனல், காற்றாலை மற்றும் சோலார் மின் உற்பத்தி மூலமும் நீண்டகால ஒப்பந்தம் மூலம் (ரூ4.91,ரூ5.50) குறைந்த விலையில் 2028,2029 வரை 2800MW மின்சாரம் வாங்கியதாலும் அதிக பட்சம் 21,800 MW மின்தேவையை முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மின்தட்டுப்பாடு, மின்வெட்டு இல்லாமலும்



மற்றும் அதிக மின்கட்டண உயர்வு இல்லாமலும் நல்லாட்சி நடத்தியது நினைவிருக்கிறதா CM Sir?

த.வெ.க.ஆட்சிக்கு வந்ததும் TNEB க்கு சொந்தமான மின் உற்பத்தியை 30% மாக குறைத்தும், குறைந்தவிலை ஒப்பந்தத்திலுள்ள 1000 MW மின்சாரத்தை வாங்காமலும் செயற்கையான மின் தட்டுப்பாட்டை உருவாக்கி அதானியிடம் அதிக விலையில் யூனிட் 1க்கு ரூ41க்கு வாங்க துடிப்பதன் மர்மம் என்ன CM Sir?

தி.மு.கழக ஆட்சியில் உடன்குடியில் 660×2 MW மின்திட்டத்தையும், அதன் தேவைக்கு நிலக்கரி கொண்டு வருவதற்கு ரூ13,500 கோடியில் உருவாக்கப்பட்ட சிறு துறை முகத்தையும் அதானிக்கு அடிமாட்டு விலைக்கு கொடுக்க நினைப்பது அச்சமா? அல்லது ஆந்திரா ரெட்டிகேங்கின் திட்டமா CM Sir?

தி.மு.கழக ஆட்சியில் தன்னிறைவு பெற்ற மின்சார வாரியத்தை 6 மாத காலத்தில் ரூ2.5 இலட்சம் கோடிக்கு மேல் கடனாக்கி மேலும் அதானியிடம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கி கடனை அதிகப்படுத்தி சென்னை விமான நிலையம், தூத்துக்குடி துறைமுகம் போல் தமிழ் நாடு மின்சார வாரியத்தையும் அதானிக்கு வழங்க உங்கள் டெல்லி பிரதிநிதி வெங்கட்ரமணா பேசி முடித்துவிட்டாரா? அதற்காக கையூட்டு பெற்றதாக பேசப்படும் பல ஆயிரம் கோடி ரூபாயை எந்த நாட்டில் பதுக்கி வைத்துள்ளீர்கள் CM Sir.?.

தமிழ்நாட்டுமக்கள் மற்றும் மின்வாரிய ஊழியர்களின் கடின உழைப்பால் உருவாக்கப்பட்ட பல இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள மின் வாரியத்தை அதானிக்கு தாரைவார்க்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்பதை மறந்து விடாதீர்கள் CM Sir.?

இவ்வாறு அவர் தனது வலைதளத்தில் கூறியுள்ளார்.

### சொத்துக்குவிப்பு வழக்கு:

# முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுதலை!

## தூத்துக்குடி நீதிமன்றம் உத்தரவு!

தூத்துக்குடி, நவ. 5- சொத்து குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம். எல்.ஏ., மற்றும் அவரது குடும்பத்தினர் 7 பேரும் விடுதலை செய்யப் பட்டனர். தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் எம். எல்.ஏ., கடந்த 2001 முதல் 2006 வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக பதவி வகித்தார்

அப்போது அவர்



தனது பெயரிலும், குடும்பத்தினர் பெயரிலும் வருமானத்தை மீறி 2 கோடியே 7 லட்சத்து 96 ஆயிரத்து 384 ரூபாய்க்கு சொத்து சேர்த்ததாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் அனிதா ராதாகிருஷ்ணன் (74), அவரது மனைவி ஜெயகாந்தி (66), சகோதரர்கள் சண்முகானந்தன் (58), சிவானந்தன் (61), மகன்கள் அனந்த பத்மநாபன் (47), அனந்த ராமகிருஷ்ணன் (45), அனந்த மகேஸ்வரன் (44) ஆகிய 7 பேரும் சேர்க்கப்பட்டு இருந்தனர்.

இந்த வழக்கு தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்தது. இந்நிலையில் தூத்துக்குடி நீதிமன்றத் தில் சொத்துக் குவிப்பு வழக்கை மதுரையில் உள்ள சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத் துக்கு மாற்றும்படி கோரிய அமலாக்கத் துறையின் மனுவை தள்ளுபடி செய்து கடந்த ஆகஸ்ட் மாதம் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் வழக்கை விரைந்து விசாரித்து முடிக்க உத்தர விட்டது.

இதைத் தொடர்ந்து 108 சாட்சிகளிடம் விசாரணை, குறுக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை வழக்கு விசாரணைக்காக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அவரது குடும்பத்தினர்தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி சுபாதேவி, குற்றச்சாட்டை லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் அரசு தரப்பு நிரூபிக்காத தால் வழக்கில் இருந்து அனிதா ராதாகிருஷ்ணன் உள்பட 7 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இதை வரவேற்று அவரது ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

### தூய சக்தியா? ஊழல் சக்தியா?

# த.வெ.க. அரசின் வெங்காய கொள்முதல் ஊழல்!

## தி.மு.க. ஐ.டி. விங் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.5- தி.மு.க. ஐ.டி.விங்கின் வலை தளப் பதிவு வருமாறு:-

யோக்கியமான தூயசக்தி தவெக அரசு, ஒன்றிய அரசின் NAFED நிறுவனத்திடமிருந்து 450 டன் வெங்காயத்தை சமீபத்தில் கொள்முதல் செய்தது.

இந்தக் கொள்முதலுக்கான உத்தரவை மாநில கூட்டுறவுத் துறையின் பதிவாளர் செல்வி G லதா IAS பிறப்பித்திருக்கிறார்.

மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் துணைச் செயலாளர் பங்கஜ் குமார் பன்சாலுக்கு இந்தக் கொள்முதல் விவகாரத்தில் தலையீடு இருப்பதாகக் குற்றஞ்சாட்டப் படுகிறது.

கொள்முதல் செய்யப்பட்ட வெங்காயத்தின் தரம் மிகவும் மோசமாக இருந்ததாகக் கூறப் படும் நிலையில், கொள்முதல் செயல்பாட்டில் முறைகேடுகள் நடந்திருக்கலாம் என்றும், ஊழல் நடந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு




விடை தேவை.

இந்த விவகாரத்தில் நியாயவிலைக் கடை விற்பனையாளர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து. தமிழ் நாடு கூட்டுறவுத் துறை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கொள்முதலில் எந்த வகையிலும் சம்பந்தப்படாத சாதாரண கடைநிலை ஊழியர்கள் மீது பழிபோடப்படுகிறது என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சென்னையில் உள்ள கூட்டுறவுத் துறை தலைமையகத்தில் 1,000க்கும் மேற்பட்ட மாநில அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து; போராட்டத்தில் பங்கேற்றதற்காக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போராட்டங்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, மாநில அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெற ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

ஆனால் நடந்திருக்கும் பல நூறு டன் வெங்காய கொள்முதல் ஊழலுக்கு யார் பொறுப்பு? தமிழ்நாடு கூட்டுறவுத்துறையில் என்ன நடக்கிறது?

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### என்.எல்.சி, தொ.மு.ச.

# மூத்த முன்னோடி ஜி.பி. காளியப்பன் மறைவு!

## சபா.இராசேந்திரன்–தொ.மு.ச.–கழக நிர்வாகிகள் அஞ்சலி!

கடலூர்,நவ.5 - நெய்வேலி NLC தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவரும், மூத்த முன்னோடியுமான ஜி.பி.காளியப்பன் அவர்கள் (வயது 98), 01.11.2026 அன்று இயற்கை எய்தினார் , G.P.காளியப்பன் அவர்கள் NLC இந்தியா நிறுவனத்தில் Mine1 பிரிவில் CME Operator / Spl. Grade ஆகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

நெய்வேலியில் NLC தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தொடங்கப்பட்ட போது அதன் நிறுவனர்களாக விளங்கிய ஏழு பேரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. தனது வாழ்நாள் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மிகுந்த ஈடுபாடும், தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் மீதும் ஆழ்ந்த பற்றும் கொண்டு வாழ்ந்தவர்.

தனது குடும்பத்தில் உள்ள அனைவரையும் கழக இயக்கத்தில் ஈடுபடுத்தி, கழகப் பணியிலும் தொழிற்சங்கப் பணியிலும் பங்கேற்கச் செய்தவர். இவரது சகோதரர் G.P. வெங்குடு அவர்கள் கோபிசெட்டிபாளையம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கழகத்திற்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திற்கும் நீண்டகாலமாக அரும்பணியாற்றிய மூத்த முன்னோடியான அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், பண்ருட்டி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சபா. இராஜேந்திரன் அவர்கள் நேரில் சென்று மலரஞ்சலி செலுத்தினார்.

மேலும், நெய்வேலி நகரக் கழகச் செயலாளர், கழக நிர்வாகிகள், தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைமைப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினர். NLC தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் வளர்ச்சிக்கும், கழக இயக்கத்தின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக விளங்கிய மூத்த முன்னோடி G.P. காளியப்பன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், தொழிற்சங்கத் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மின்சார வாரிய டெண்டர் குளறுபடிகள்!

## 'ரீல்ஸ்' த.வெ.க. அரசு பதிலளிக்குமா?

கேரளாவிற்கு ரூ.8.64, ரூ.12.50, ரூ.14.50 ஆகிய விலைகளில் ஒரு யூனிட் மின்சாரம் கிடைக்கும் போது தமிழ்நாட்டில் ரூ.35–ரூ.37 ரூபாய்க்கு வாங்க முயன்றது ஏன் என்ற கேள்விகளை பலரும் முன் வைக்கிறார்கள் .

மின்சார டெண்டர் தொடர்பாக த.வெ.க. அரசு பதில் அளிக்க வேண்டிய 10 கேள்விகள் பார்ப்போம்.

1. மின்தேவை ஜூலை மாதத்திலேயே அதிகரிக்கும் என்று மின்வாரிய அதிகாரிகள் எச்சரித்ததாக கூறப்படுகிறது. ஆனால் அக்டோபர் 6–ம் தேதி வரை ஏன் தமிழ்நாடு அரசின் மின்வாரியம் காத்திருந்தது.
2. அக்டோபர் 12 முதல் அக்டோபர் 31 வரை மின்சாரம் தேவைப்பட்ட நிலையில், அதற்கு ஆறு நாட்களுக்கு முன்புதான் டெண்டர் வெளியிட வேண்டிய அவசியம் எதனால் வந்தது? ஏன் முன்கூட்டிய டெண்டர் விடவில்லை?
3. ஆந்திர அரசு செப்டம்பர் 9–ம் தேதியே அக்டோபர் மாதத்துக்கான மின்சாரத்தை யூனிட் ரூ.16 முதல் ரூ.20 வரை வாங்க ஒப்பந்தம் செய்தாக தகவல்கள் வந்துள்ளது.ஆனால் ஆந்திரப் பிரதேசத்தால் குறைந்த விலைக்கு வாங்க முடிந்த போது, தமிழ்நாட்டால் ஏன் அதேபோன்ற முன்கூட்டிய ஏற்பாட்டைச் செய்ய முடியாமல் போனது
4. அதேபோல் ஜூன் மாதங்களில் இருந்தே மின்சாரம் பல இடங்களில் அடிக்கடி கட்டாகி வந்தது. இப்படியான சூழலில் அக்டோபரில் மின்சாரப் பற்றாக்குறை திடீரென ஏற்பட்டதா? அல்லது திட்டமிடலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அவசரக் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதா? என்ன காரணத்திற்காக ரூ.35–ரூ.37 கொடுத்து வாங்க வேண்டிய நிலை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டது?
5. கேரளாவுக்கு ஒரு தனியார் நிறுவனம் 500 மெகாவாட் மின்சாரத்தை யூனிட் ரூ.8.64 விலையில் 24 மணி நேரமும் வழங்க முன் வந்ததாகச் செய்தி வந்துள்ளது. இதுபோன்ற நிறுவனங்களிடம் தமிழ்நாடு ஏன் முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடத்தவில்லையா.. கேரளாவின் ரூ.8.64 மின்சார முன்மொழிவைத் தமிழ்நாடு பரிசீலிக்கவில்லையா?
6. அரசு மின்சார தேவைக்கு குறுகிய கால ஒப்பந்தங்களை நம்பியிருப்பதற்குப் பதிலாக, எதிர்கால மின்தேவையைக் கணித்து மின்சார உற்பத்தி நிறுவனங்களுடன் நீண்டகால ஒப்பந்தங்களை முன்கூட்டியே செய்யாதது ஏன்?
7. காற்றாலை மின்சார உற்பத்தி என்பது எல்லா மாதமும் ஒரே மாதிரி இருக்காது என்பது அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். இது பருவ நிலை மாறுபாடு தான்.. எனவே அதனை நம்பாமல் மாற்று மின்சார ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யாதது ஏன்? காற்றாலை மின்சாரம் குறையப்போவதை முன்கூட்டியே கணிக்காதது ஏன்
8. என்எல்சி உள்ளிட்ட ஒன்றிய மின் தொகுப்பில் இருந்து போதிய மின்சாரம் திடீரென கிடைக்காமல் போகும் போது, அந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க முன்கூட்டியே அரசு கைவசம் வைத்திருந்த திட்டம் என்ன?
9. இறுதியாக ரூ.35, ரூ.37, ரூ.41.50 என விலை குறிப்பிட்ட நிறுவனங்கள் எது? அவற்றின் ஏல விவரங்கள், ஒப்பீட்டு அறிக்கைகள், ஒப்பந்த நிபந்தனைகள் பொதுமக்களுக்கு அரசு வெளியிடுமா? (இப்போது அரசு ரத்து செய்வதாக அறிவித்துள்ளது)
10. ஜூலை மாதத்தில் அதிகாரிகள் அளித்த எச்சரிக்கைகள், மின்வாரியக் கூட்டக் குறிப்புகள், அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் ஆகியவற்றை அரசு வெளியிட தயாராக உள்ளதா? இப்போது எடுத்த முடிவுகளை அரசு வெளிப்படையாக விசாரிக்குமா?

இந்த 10 கேள்விகளுக்கு அரசு பதில் அளித்தால், மின்சார கொள்முதல் விவகாரத்திற்கு விடை கிடைக்கும்.



நெல்லை மேற்கு மாவட்டம் கல்லிடைக்குறிச்சி பேரூர் கழகம் சார்பில் நடைபெறயிருக்கும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கல்லிடைக்குறிச்சி கோவிந்தசாமி திருமண மண்டபத்தில் பேரூர் செயலாளர் க.இசக்கிபாண்டியன் தலைமையில் பேரூர் அவைத்தலைவர் தங்கப்பன், துணைச் செயலாளர்கள் ராஜ்குமார், அகஸ்தியர், மஞ்சுளா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டப் பிரதிநிதி அனிபா வரவேற்றார். இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று விரைவில் நடைபெறவிருக்கும் அம்பை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வ கூடாமணி, பிரேம் ஆனந்த் உள்பட ஒன்றிய, பேரூர், வார்டு, கழக நிர்வாகி கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் BLA 2, BLC, கழக முன்னோடிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் பேரூர் பொருளாளர் ஜார்ஜ் ராபர்ட் நன்றி கூறினார்.